KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# பள்ளிகளில் வந்தே மாதரம் பாடுவது கட்டாயமாக்கப்படவில்லை

**புது தில்லி, மார்ச் 25:** அரசு நிகழ்ச்சிகள், பள்ளிகளில் வந்தே மாதரம் பாடப்படுவதை மத்திய உள்துறை அமைச்சக சுற்றறிக்கை கட்டாயமாக்கவில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அரசு நிகழ்ச்சிகள் மற்றும் பள்ளிகளில் வந்தே மாதரம் பாடலின் அனைத்து வரிகளையும் பாடுவது, அந்தப் பாடலை பாடும்போது கடைப்பிடிக்கவேண்டிய விதிகள் தொடர்பாக கடந்த ஜன.28-ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சகம் சுற்றறிக்கை வெளியிட்டது.

இந்தச் சுற்றறிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் முகமது சயீத் நூரி என்பவர் தாக்கல் செய்த மனுவை தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை (மார்ச் 25) விசாரித்தது.



அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது: மத்திய உள்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கையில் அரசு நிகழ்ச்சிகள் மற்றும் பள்ளிகளில் வந்தே மாதரம் பாடலை பாடலாம் என்று அறிவுறுத்தல்தான் வழங்கப்பட்டுள்ளதே தவிர, அதைக் கட்டாயம் பாட வேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை. முன்பு தேசியக் கொடி விதிகள் இருந்தன. தேசியக் கொடி ஏற்றப்படும்போது பின்பற்றவேண்டிய விஷயங்கள் அந்த விதிகளில் தெரிவிக்கப்பட்டது. அதுபோலத்தான் வந்தே மாதரம் பாடல் குறித்த விதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

வந்தே மாதரம் பாடப்படவில்லை என்றால் சட்டப்படி தண்டிக்க வேண்டும் என்று சுற்றறிக்கையில் உத்தரவிடப்படவில்லை. அவ்வாறு சட்டப்படி தண்டிக்கக் கூடிய நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டால், மனுதாரர் உச்சநீதிமன்றத்தை அணுகலாம். ஒரு நிகழ்வு நடைபெறுவதற்கு முன்பாக முன்கூட்டியே அச்சப்பட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி, அதைத் தள்ளுபடி செய்தது.

---

### கிர் சோம்நாத் மாவட்டத்தில்

# 3-வது ராக்கெட் ஏவுதளம் அமைக்க குஜராத் அரசு முடிவு

**புதுடெல்லி**

ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டா, தமிழகத்தின் குலசேகரபட்டினத்துக்கு அடுத்ததாக நாட்டின் 3-வது ராக்கெட் ஏவுதளத்தை குஜராத் மாநிலம் கிர் சோம்நாத் மாவட்டம் அருகே அமைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

குஜராத் சட்டப்பேரவையில் பட்ஜெட் கோரிக்கை குறித்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அர்ஜுன் மோத்வாடியா பேசுகையில், ''ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான இடம் கிர் சோம்நாத் மாவட்டம் அருகே அரபிக் கடல் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது. விண்வெளித்துறையின் கீழ் செயல்படும் இன்-ஸ்பேஸ் நிறுவனத்துடன் ஆலோசனை நடத்திய பிறகு இந்த இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. நமது வேண்டுகோள்படி ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு பொருத்தமான இடத்தை இன்-ஸ்பேஸ் நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. இதை ஸ்ரீஹரிகோட்டா போல் மேம்படுத்த முடியும்'' என்றார்.

இதுகுறித்து விண்வெளித் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ''இந்தியாவில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணியில் மாநில அரசு அல்லது தனியார் நிறுவனம் கூட ஈடுபடலாம். விண்வெளித் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் மூலம் இதற்கான நடைமுறை வகுக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து செயற்கைக் கோள்களை ஏவுவதற்கான பணிகளை மேற்கொள்ள இன்-ஸ்பேஸ் நிறுவனத்தின் முன் அனுமதி தேவை'' என்றார்.

# ‘ஸ்டெம் செல்’ பயன்பாடு: அனுமதி பெறுவது கட்டாயம்

**சென்னை, மார்ச் 25:** வழக்கத்துக்கு மாறான ஸ்டெம் செல் சிகிச்சைகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு உரிய அனுமதி பெறுவது கட்டாயம் என்று தேசிய மருத்துவ ஆணையம் (என்எம்சி) தெரிவித்துள்ளது.

ரத்தம் சார்ந்த அல்லது எலும்பு மஜ்ஜை சார்ந்த பாதிப்புகள் ஏற்படும்போது ஸ்டெம் செல் சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுகிறது.

தானமளிப்பவரின் ரத்தத்தையோ அல்லது இடும்பு எலும்பு மஜ்ஜையில் உள்ள ரத்த அணுக்களையோ எடுத்து அது தேவைப்படும் நோயாளிகளுக்கு செலுத்தப்படுகிறது. ரத்தம் சார்ந்த பல்வேறு புற்றுநோய்கள், நிணநீர் புற்றுநோய்கள், தண்டுவட வளைவு பாதிப்பு என பல்வேறு நோய்களுக்கு ஸ்டெம் செல் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

இந்நிலையில், வரையறுக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் ஆராய்ச்சிகளைத் தாண்டி வேறு வகைகளில் அவற்றைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்றும், அதன் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் என்எம்சி எச்சரித்துள்ளது.

உச்சநீதிமன்ற விதிகளின்படி, ஸ்டெம் செல் பயன்பாட்டுக்கு உரிய மருத்துவ அனுமதியை சம்பந்தப்பட்ட மருத்துவ அமைப்புகளிடம் பெற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

# மாற்றியமைக்கப்பட்ட ‘உடான்’ திட்டத்துக்கு ரூ.28,840 கோடி

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புது தில்லி, மார்ச் 25:** பிராந்திய விமானப் போக்குவரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட ‘உடான்’ திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியது.

ரூ.28,840 கோடி ஒதுக்கீட்டுடன் அடுத்த 10 ஆண்டுகளுக்கு (2026-27 முதல் 2035-36 வரை) செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், விமான நிலையங்கள் மேம்பாடு, செயல்பாடு-பராமரிப்புக்கான ஆதரவு, நவீன ஹெலிபேடுகள் கட்டமைப்பு மற்றும் உள்நாட்டு விமான கொள்முதலுக்கான ஆதரவை உள்ளடக்கியதாகும்.

தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அவர் கூறுகையில், ‘மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்தின்கீழ், இதுவரை பயன்பாட்டில் இல்லாத ஓடுதளங்களைக் கொண்ட 100 விமான நிலையங்கள் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்படும். இந்தப் பணிகளுக்காக, அடுத்த 8 ஆண்டுகளில் ரூ.12,159 கோடி ஒதுக்கீடு செய்ய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதேபோல், குறிப்பிட்ட வழித்தடங்களில் விமானங்களை இயக்குவதால், விமான நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்டுவதற்கான மானிய நிதிக்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கு ரூ.10,043 கோடி ஒதுக்கப்படும்’ என்றார்.

மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்தில் பிற பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், ‘அடுத்த 8 ஆண்டுகளில் தலா ரூ.15 கோடி செலவில் 200 நவீன ஹெலிபேடுகள் கட்டமைக்கப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு சுமார் ரூ.3,661 கோடியாகும்.

முன்னுரிமை - லட்சிய மாவட்டங்களில் கடைசி தொலைவு இணைப்பு மற்றும் அவசரகால செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் நவீன ஹெலிபேடுகள் கட்டமைக்கப்பட உள்ளன. 441 சிறிய விமான நிலையங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு ஆதரவளிக்க அடுத்த 3 ஆண்டுகளுக்கு ரூ.2,577 கோடி நிதி ஒதுக்கப்படும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய விமானப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் கடந்த 2016-இல் தொடங்கப்பட்ட உடான் திட்டம், இந்த ஆண்டு இறுதியில் நிறைவடையவுள்ளது. இதையொட்டி, மாற்றியமைக்கப்பட்ட உடான் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

தற்போதைய திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 95 விமான நிலையங்கள், பிரத்யேக ஹெலிகாப்டர் தளங்கள் மற்றும் நீர் பரப்பில் செயல்படும் விமான தளங்களில் இருந்து 663 வழித்தடங்கள் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த வழித்தடங்களில் மொத்தம் 16 கோடி பயணிகளுடன் 3.41 லட்சம் விமான சேவைகள் இயக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐவிஎஃப்ஆர்டி திட்டம் நீட்டிப்பு: நாட்டின் குடியேற்ற நடைமுறையை நவீனமாகவும், பாதுகாப்பானதாகவும் மாற்றும் நோக்கில், குடியேற்றம்-நுழைவு இசைவு (விசா)-வெளிநாட்டினர் பதிவு மற்றும் கண்காணிப்புத் திட்டத்தை (ஐவிஎஃப்ஆர்டி) அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், இதற்காக ரூ.1,800 கோடி நிதி ஒதுக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

### போட்டித் தேர்வுகள் தொடர்பான அனைத்து தகவல்களும் அடங்கிய

# 'தேர்வுக் களம்' செயலி குறித்து விழிப்புணர்வு

## டிஎன்பிஎஸ்சி, டிஆர்பி உள்ளிட்ட தேர்வு முகமைகளுக்கு அறிவுறுத்தல்

**சென்னை**

அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தொடர்பான அனைத்து தகவல்களும் அடங்கிய 'தேர்வுக்களம்' செயலி குறித்து மாவட்ட அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு டிஎன்பிஎஸ்சி, டிஆர்பி உள்ளிட்ட தேர்வு முகமைகளை அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக அரசின் மனிதவள மேலாண்மைத்துறைச் செயலர் சி.சமயமூர்த்தி, அரசு பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம், சீருடை பணியாளர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகளின் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

டிஎன்பிஎஸ்சி, டிஆர்பி உள்ளிட்ட அரசு பணிகளுக்கான தேர்வு முகமைகள் மூலம் பணியாளர்களை தேர்வு செய்யும் நடைமுறைகளை எளிமைப்படுத்தும் வகையில், தமிழக அரசு 'தேர்வுக்களம்' என்ற ஒருங்கிணைந்த கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்த செயலியில், அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் குறித்த அனைத்து ஆள்சேர்ப்பு அறிவிப்புகள், அத்தேர்வுகளுக்கான இணையவழி விண்ணப்பம், தேர்வு முடிவுகள், செய்தி வெளியீடுகள், தேர்வுக்கான பாடக் குறிப்புகள், முந்தைய போட்டித் தேர்வுகளின் விடைகளுடன் கூடிய வினாத்தாள்கள், போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் தொடர்பான விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

மேலும், அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளின் காணொலிகள், வேலைவாய்ப்புச் செய்திகள் உள்பட செய்தித்தாள்களில் அளிக்கப்படும் அறிவிப்புகள் ஆகியவற்றை தெரிந்துகொள்ள முடியும். குறித்த நேரத்தில் நுழைவுச் சீட்டுகள், தேர்வு முடிவுகள் மற்றும் முக்கிய தகவல்கள் நேரடியாக ஆர்வலர்களின் கைப்பேசிக்கு உடனடியாக அறிவிக்கும் வகையில் இந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால், எந்த தகவலும் தவறவிடாமல் தேர்வர்கள் சிறப்பாகவும், திறமையாகவும், தேர்வுக்கான தயாரிப்பை மேற்கொள்ள முடியும். அதோடு ஐஏஎஸ், ஐஎஃப்எஸ், ஐபிஎஸ், ஐஆர்எஸ் உள்ளிட்ட பணிகளுக்கான சிவில் சர்வீஸ் தேர்வு உள்பட மத்திய அரசின் தேர்வு முகமைகள் (யுபிஎஸ்சி, எஸ்எஸ்சி) மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்களையும் இச்செயலியில் பெறலாம்.

போட்டித் தேர்வர்கள் 'தேர்வுக்களம்' செயலியை பதிவிறக்கம் செய்து உள்ளே நுழையும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதால் போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பது மிக எளிதாக இருக்கும்.

எனவே, தேர்வுக்களம் செயலியின் பயன்பாட்டை பயனாளிகள் அறிந்துகொள்ளும் வகையிலும், அதனை அனைவரும் பதிவிறக்கம் செய்து உரிய வகையில் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் விதமாகவும் இச்செயலி குறித்து மாவட்ட அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பிஎன்ஜி-க்கு மாற மறுத்தால் எல்பிஜி விநியோகம் நிறுத்தம்

## மத்திய அரசு புதிய உத்தரவு

புது தில்லி, மார்ச் 25: குழாய் வழி இயற்கை எரிவாயு (பிஎன்ஜி) இணைப்புக்கான வசதியுள்ள இடங்களில் வசிக்கும் நுகர்வோர், அந்த எரிவாயு பயன்பாட்டுக்கு மாற மறுத்தால், எல்பிஜி சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்படும் என்று மத்திய அரசு புதிய உத்தரவை வெளியிட்டுள்ளது.

மேற்காசிய போரால் எல்பிஜி-க்கு தட்டுப்பாடு நிலவும் சூழலில், பிஎன்ஜி கட்டமைப்பை விரிவாக்கவும், ஒரே வகையான எரிபொருளை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காசிய போரின் எதிரொலியாக, அந்தப் பிராந்தியத்தில் இருந்து இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கான எரிவாயு ஏற்றுமதி தடைபட்டுள்ளது. எரிபொருள் தேவையில் பெருமளவில் இறக்குமதியைச் சார்ந்துள்ள இந்தியா கடும் இடர்ப்பாட்டை எதிர்கொண்டுள்ளது.

இதுபோன்ற சூழலில், உள்நாட்டு தயாரிப்பை தீவிரப்படுத்துவதுடன், பலதரப்பட்ட நாடுகளில் இருந்தும் கொள்முதல் செய்யக் கூடிய மிக வசதியான மாற்று எரிபொருளான பிஎன்ஜி-க்கு மாறும்படி வீடுகள் மற்றும் வர்த்தகப் பயன்பாட்டாளர்களை மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது.

குழாய் மூலம் இந்த எரிவாயு தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதால், எல்பிஜி சிலிண்டர்களைப் போல எரிவாயு நிரப்ப முன்பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை.

**மத்திய அரசு முக்கிய உத்தரவு:** இந்நிலையில், அத்தியாவசிய பொருள்கள் சட்டத்தின்கீழ் 'இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருள்கள் விநியோகம் (எரிவாயு குழாய் மற்றும் பிற வசதிகளைக் கட்டமைத்தல், செயல்படுத்துதல், விரிவாக்கம்) தொடர்பான ஆணை-2026'-ஐ மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இது, பிஎன்ஜி உள்கட்டமைப்பை விரைந்து விரிவுபடுத்துதல், தேவையான ஒப்புதல்களை எளிதாக்குதல், எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் எல்பிஜி-யில் இருந்து பிஎன்ஜி-க்கு மாறுவதை ஊக்குவித்தல் ஆகிய முக்கிய இலக்குகளைக் கொண்டதாகும்.

**பிஎன்ஜி-க்கு மாறாவிட்டால்...:** மேற்கண்ட உத்தரவின்படி, தங்கள் பகுதியில் பிஎன்ஜி இணைப்புக்கான வசதி இருந்தும், அதைத் தேர்வு செய்யாவிட்டால் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு எல்பிஜி விநியோகம் நிறுத்தப்படும்.

அதேநேரம், தற்போதைய சூழலில் குழாய் மூலம் எரிவாயு இணைப்பை வழங்குவதில் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமற்ற வீடுகளுக்கு 'தடையில்லாச் சான்றிதழுக்கு' உள்பட்டு, எல்பிஜி விநியோகத்தை தொடர்ந்து அனுமதிக்கும் பிரிவும் இடம்பெற்றுள்ளது.

பிஎன்ஜி வசதியுள்ள இடங்களில் எல்பிஜி விநியோகத்தைக் குறைத்து, பிற இடங்களுக்கு மடைமாற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் வாயிலாக ஒரு நெருக்கடியான சூழல், நல்ல வாய்ப்பாக மாறியுள்ளது என்று மத்திய பெட்ரோலிய அமைச்சக செயலர் நீரஜ் மிட்டல் எக்ஸ் பதிவில் குறிப்பிட்டார்.

**குறித்த காலத்துக்குள் அனுமதி:** குழாய் வழி எரிவாயு கட்டமைப்புப் பணிகளை விரைவுபடுத்தும் வகையில் ஒப்புதல் நடைமுறைகளை எளிதாக்குதல், கட்டணங்களை தரநிலைப்படுத்துதல் மற்றும் குறித்த காலத்துக்குள் அனுமதி வழங்குதலை உறுதி செய்ய மேற்கண்ட உத்தரவு வழிவகை செய்கிறது. பிஎன்ஜி இணைப்புக்கான விண்ணப்பங்களுக்கு குறித்த காலத்துக்குள் அனுமதி வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, பிஎன்ஜி இணைப்பு பெற்றவர்கள், எல்பிஜி சிலிண்டரை பயன்படுத்த தடை விதித்து, மத்திய அரசு அண்மையில் உத்தரவு பிறப்பித்தது. அதேபோல், நகர்ப்புறங்களில் குழாய் வழி எரிவாயு இணைப்புத் திட்டங்களுக்குத் தேவையான ஒப்புதலை விரைந்து வழங்க மாநில அரசுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையின்படி

# தமிழகத்தில் 82.5% பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள்

## நாட்டிலேயே முதலிடம் என தமிழக அரசு பெருமிதம்

**சென்னை**

தமிழகத்தில் 82.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டு, நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக மத்திய அரசின் அறிக்கையை சுட்டிக்காட்டி தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த 2024-25-ம் ஆண்டுக்கான மத்திய அரசின் ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வி ஆய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் 82.5 சதவீத அரசுப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன. திறன்மிகு வகுப்பறைகளை கொண்டுள்ளதில் தமிழகம் இந்தியாவில் முதலிடம் பிடித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் உள்ள பள்ளிகளில், திறன்மிகு வகுப்பறைகள் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருப்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது, குஜராத்தில் 57.1 சதவீதம், மத்தியப் பிரதேசத்தில் 7.6 சதவீதம், மகாராஷ்டிராவில் 4.6 சதவீதம், உத்தரப் பிரதேசத்தில் 3.6 சதவீதம் பள்ளிகளில் மட்டுமே திறன்மிகு வகுப்பறைகள் உள்ளன.

திமுக ஆட்சி 2021-ல் பொறுப்பேற்ற நிலையில், தமிழகத்தில் 43.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் இருந்தன. தற்போது 99 சதவீத பள்ளிகளில் இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2024-25-ல் 82.5 சதவீத பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அமைந்துள்ளன. மத்திய அரசு வெளியிட்டு வரும் ஆய்வறிக்கைகள் தமிழகம் முதலிடத்தில் இருப்பதை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.